ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2381/26 - 2024 අප්‍රේල් මස 24 වැනි බදාදා - 2024.04.24
*2381/26 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கல்முனை மாநகர சபை**

*கல்முனை மாநகர சபை எல்லைக்குள் கழிவகற்றல் முகாமைத்துவ சேவை வழங்கலுக்கான*

*கட்டணங்கள் தொடர்பிலான அறிவித்தல்*

*கல்முனை மாநகர சபையின் மாநகர ஆணையாளர் ஆகிய நான், மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) பிரிவு 286 (A) இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும், 2023.08.08, 2023.08.22 ஆம் மற்றும் 2023.12.05 ஆம் திகதிய முகாமைத்துவக் குழுக்களின் தீர்மானங்களின் அடிப்படையிலும், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத்துணைவிதிகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு 1989.01.20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், கிழக்கு மாகாண ஆளுநரினால் 1999.08.13 ஆந் திகதிய 1093 ஆம் இலக்க உள்ளூராட்சி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் அங்கீகரிக்கப்பட்டதன் பேரில் மேற்குறிப்பிடப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் 2002.06.07 ஆந் திகதிய 1240 ஆம் இலக்க வர்த்தமானியில் உள்ளூராட்சி பகுதியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் கல்முனை மாநகர சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான துணைவிதிகளின் பாகம் XI (கழிவகற்றல் தொடர்பான துணைவிதிகள்) சட்டத்தின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட 4 ஆம் துணைவிதியால் கல்முனை மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதிய சபைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு 2013.04.26 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 1808 ஆம் இலக்கத்தில் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினையும், 2019.03.08 ஆம் திகதி 2113/61 ஆம் இலக்கத்தில் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினையும், 2020.09.10 ஆந் திகதி 2192/45 ஆம் இலக்கத்தில் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினையும் இத்தால் வலிதற்றதாக்கி இரத்துச் செய்கின்றேன்.*

*பின்வரும் கழிவகற்றல் முகாமைத்துவ சேவைக் கட்டணங்கள் அனைத்தும் 2024.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்பதனை இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.*

1A – PG6703 –05(2024/04)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| கழிவகற்றல் முகாமைத்துவ சேவை பெறுநரின் வகை | வருடாந்த/மாதாந்தக் கட்டணம் |
|---|---|
| 01. கோழிக்கடைகள்<br>I. பெரிய கடைகள்<br>II. சிறிய கடைகள் | <br>மாதாந்தம் ரூபா 12000.00<br>மாதாந்தம் ரூபா 3000.00 |
| 02. தனியார் வைத்தியசாலைகள் | மாதாந்தம் ரூபா 15000.00 |
| 03. இளநீர்க்கடைகள் | மாதாந்தம் ரூபா 2000.00 |
| 04. உணவகங்கள், ஹோட்டல்கள்<br>I. விசேட தரம்<br>II. A தரம்<br>III. B தரம்<br>IV. C தரம் | <br>மாதாந்தம் ரூபா 15000.00<br>மாதாந்தம் ரூபா 6000.00<br>மாதாந்தம் ரூபா 4000.00<br>மாதாந்தம் ரூபா 2000.00 |
| 05. ஏனைய வர்த்தக நிலையங்கள்<br>(மேற்குறிப்பிடப்பட்ட 01,02,03,04 ஆம் பிரிவுகள் தவிர்ந்தவை) | வருடாந்தம் ரூபா 2600.00 |
| 06. விசேட திண்மக் கழிவகற்றல்<br>(கட்டட கழிவுகள் தவிர்ந்தவை) | * உழவு இயந்திரம் ஒன்றிற்கு - ரூபா 4000.00<br>* Drum Truck ஒன்றிற்கு - ரூபா 7000.00 |
| 07. மலசலகூடக்குழி துப்பரவாக்கல் | குழி ஒன்றிற்கு (குழியின் கொள்ளளவு 3000 L வரை) - ரூபா 10000.00 |

**ஏ.எல்.எம்.அஸ்மி,**
மாநகர ஆணையாளர்,
கல்முனை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கல்முனை.

EOG 04 - 0196